பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆவணி 5 (20—8—68) செவ்வாய் ★ வெளியூர்: ஆவணி 6 (21—8—68) புதன் [இதழ்: 56

உரிமத் தொகை குறைப்பு

தமிழக அரசு முடிவு

★

சென்னை, ஆக. 19—
சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்களுக்கான உரிமத் தொகையைக் (லைசென்சு) குறைக்கத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

அதற்கான திருத்த மசோதாவைத் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் செ. மாதவன் சட்டமன்றத்தில் கொண்டுவந்தார்.

இதன்படி, சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்களின் உரிமத் தொகை 40-காசிலிருந்து 30 காசாகக் குறைக்கப்படும்.

தொழிலமைதி குலைந்துவிட்டதா?

எதிர்க் கட்சியினர் புகாருக்குப் பதில்

உடனுக்குடன் கழக ஆட்சி எடுத்துக்கொள்ளும் அக்கறை--சட்டமன்றத்தில் அண்ணா விளக்கம்

சென்னை, ஆக. 19—

“ தொழில் அமைதியைப்பற்றி இப்பேரவையில் குறிப்பிட்டுக் கூறப்பட்டது; 'தொழில் அதிபர்கள் சரியான போக்கில் நடந்துகொள்ளவில்லை' என்று குறிப்பிடப்பட்டன; 'தொழில் அதிபர்களைக் கூப்பிட்டுப் பேசவேண்டுமென்றால் அவர்கள் அதற்கு இணக்கம் தருவதில்லை' என்றும் குறிப்பிட்டார்கள்,

“ ஒரு தொழில் நிறுவனத்தில் உள்ள முக்கியமான ஒருவரைச் சமரசம் செய்துவைக்க வேண்டுமென்று விரும்பி அழைத்த நேரத்தில், அவர் வரத் தயக்கப்பட்டது உண்மை; அதற்காக நான் வருத்தப்பட்டேன். பிறகு அவர் என்னிடத்தில் வந்து, விளக்கங்களையெல்லாம் கொடுத்தார்; 'அந்த நேரத்திலே வந்திருப்பேனேயானால், இருக்கிற சூழ்நிலை மிக மோசமாக ஆகியிருக்கும்; அதனால்தான் வரவில்லை' என்று சொன்னார்; என்ன சொன்னாலும் என்னுடைய மனம் திருப்தியடையவில்லை என்பதை இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

“ எந்த இடத்தில் தொழில் அமைதி கெடுவதாக இருந்தாலும் உடனுக்குடன் அது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டவுடன் அவர்களை அழைத்து---இருதரப்பாரையும் வைத்துக்கொண்டு பேசி---தொழிற் தகராறுகளைத் தீர்ப்பதில் மிகுந்த விருப்பத்தைக் காட்டுகிறவன் என்பதை பல சம்பவங்கள் சான்றுகக் காட்டும்.

“ நேற்று [illegible]ரவுகூட ஒருமணிவரையில் விவசாயத் தொழிலாளர்கள், தங்களுக்கு நிலம் தேவை [illegible] களுடன் [illegible] பேசி---அவர்களு[illegible]டைய கோரிக்கைகளையெல்லாம் நல்ல முறையில் கேட்டுக்கொண்[illegible]---[illegible]ரிய பரிகாரத்தைத் தேடுவதாகப் பேசி முடித்திருக்கிறேன்.

“ அதேபோல், சென்ற வாரத்தல் தஞ்சையில் ஒரு பகுதியில் மிராசுதாரர்களுக்கும்—உழவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறுக்காக இருசாராரையும் வரவழைத்து—எனக்குச் சில நாட்களாக உடல்நலம் சரியாக இல்லாமல் இருந்தும்—அதிகமாகப் பேசமுடியாத நிலை இருந்தபோதும்—பிற்பகல் இரண்டு மணிவரையில் இருசாராரிடத்திலும் பேசி ஒருவிதமான சமரச முடிவு ஏற்பட்டது.

“ எனக்கும் இந்த அரசுக்கும் தொழில் அமைதியைக் ;காப்பாற்றுவதில் அக்கறை இருக்கிறது. அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகினறன என்பதற்குச் சான்றுகச் சிலவற்றைக் கூற விருப்புகிறேன்; ஈசன் குரூப் தொழிற்சாலை தகராறு—மெட்டல்பாக்ஸ் கம்பெனியில் ஏற்பட்ட தகராறு—விம்கோ தொழிறசாலையில ஏற்பட்ட தகராறு—இந்தியன் போர்ஜ்ஜில் ஏற்பட்ட தகராறு—'இந்து' தொழிற்சாலையில் ஏற்பட்ட தகராறு—ஆகிய இவை ஒவ்வொன்றும் என்னுடைய நிர்வாகததில் தீர்த்துவைப்பதற்காக முயற்சி எடுத்துக்கொண்டதோடு மட்டுமல்லால், என்னுடைய நண்பர்களை எல்லாம் கூட அழைத்து, 'அதற்காக முயற்சி செய்யுங்கள்' என்று கேட்டுக்கொள்வதை ஒரு மரபாகவே -- ஒரு பழக்கமாகவே கொண்டுவருகிரோம்.

“ இரண்டு மூன்று நாட்களுக்குமுன்னால் கை வண்டித் தொழிலாளர்கள் எல்லாம் கிளர்ச்சி செய்ய முற்பட்டபோது, சுதந்தரக் கட்சி உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களை---அந்தப் பகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் அழைத்து---'எப்படியாவது தீர்த்துவையுங்கள்' என்று அனுப்பினேன்.

“ வட ஆற்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலாளர் கிளர்ச்சி --- தோல் பதனிடும் தொழிலாளர் கிளர்ச்சி நடந்த நேரத்தில் இரு சாராரையும் அழைத்து சமரசம் செய்துவைக்க முயன்று நியாயம் கிடைக்க வழி செய்திருக்கிறேன்.

“ இவைகளையெல்லாம் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வது, 'தொழில் அமைதி கெட்டுவிட்டது; யாரும் கவனிக்கவில்லை' என்றெல்லாம் சொல்வதற்கு ஆதாரம இல்லையென்பதற்காகத்தான், எது எதிலே சமரசம் செய்துவைத்திருக்கிரோம் என்பதற்குச் சில சான்றுகளைத் தந்தேன் ”

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்தில், துணை மானியக் கோரிக்கைமீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் சுட்டிக்காட்டி விளக்கினார்கள்; 'துணை மானியக் கோரிக்கையின்மீது சில பொதுவான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன; அந்தக் கருத்துக்குரிய மரியாதையைத் தருவதற்கு நான் தயங்கமாட்டேன்; ஆனால், மரியாதையைத் தருகின்ற நேரத்தில், அந்தக் கருத்துக்களையெல்லாம் அப்படியே நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கருதமாட்டார்கள் என நம்புகிறேன்' என்றுப் குறிப்பிட்டார்.

“இப்பேரவை உறுப்பினர்கள் எடுத்துச்சொன்ன கருத்துக்கள் ஒவ்வொன்றையும்பற்றி நான் எடுத்துப் பேசவில்லை என்ற காரணத்தினால், 'அவற்றையெல்லாம் கவனிசகாமல் விட்டுவிட்டேன்' என்று யாரும் எண்ணிக்கொள்ள வேண்டாம்; அவைகளுக்கெல்லாம் உரிய மரியாதையைக கொடுத்து, எதெதையெல்லாம் நான் ஏற்றுக்கொள்ள முடியுமோ அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்டு --- எவைகளைப் பரிசீலிக்க வேண்டுமோ அவைகளைப பரிசீலித்து --- எவைகள் எனக்குத் திருப்தியில்லை என்று தோன்றுகிறதோ அவைகளையெல்லாம் சந்தர்ப்பம் நேரிடுகின்றபோது விளக்கிக் கூறுவேன்” என்றும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்துக்கொண்டார்கள்.

மூன்றுபேர் அடிபட்டாலும் வருந்துபவன்நான்

பிரச்சினையைப் பெரிதாக்க எண்ணிக்கையைப் பெருக்குவதா?

ஆகஸ்டு கலவர நிகழ்ச்சிபற்றிக் கூறப்பட்ட புகார்கள் அனைத்தையும் மறுத்தும், நடைபெற்ற நிகழ்ச்சியின் உண்மையை [illegible]ரித்தும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறியதாவது;—

கனம் உறுப்பினர் பொன்னப்ப நாடார் அவர்கள் பேசும் பொழுது, 'போலீசு உடையில் யாரோ வந்து அடித்தார்கள்' என்று சொன்னார்கள்; ஆனால் 'இன்னின்னாருக்குப் போலீசு உடை கொடுக்கப்பட்டது' என்று சொல்லவில்லை. நல்லவேளையாக, போலீசுக்காரர்கள் வரையில் மட்டுமே சொன்னார்கள்; இருக்கின்ற டி. சி. க்கள், இன்ஸ்பெக்டர்கள் அனைவரும் உண்மையானவர்கள் அல்லர்; 'அவர்கள் உடையில் யாரோ வந்தார்கள்; என்ற அளவுக்குக் கற்பனை போகாமல் குறிப்பிட்ட அளவோடு நின்றதற்கு மகிழ்ச்சியடைகிறேன்.

'உண்மையான விவரங்களை அறிந்தவன்; அரசைப் பொறுப்பேற்று நடத்துகிறவன்' என்ற முறையிலே அதையெல்லாம் நான் முழுக்க முழுக்க மறுக்கிறேன்.

அடிபட்டவர்கள் 600 பேர்கள் என்று சொன்னார்கள்; நேற்று வரையில் 500 பேர்கள் என்று சொன்னார்கள்; பத்திரிகையில் 300 பேர்கள் என்று வந்தது; என்னைப் பொறுத்தவரையில், [illegible] கூட [illegible]ருத்தப்படுவேன்.

சொல்லுகின்றபொழுது அடிபட்டவர்களின் எண்ணிக்கையை நாளுக்கு நாள் உயர்த்திக்கொண்டே போவதன் மூலம் குற்றச்சாட்டு கெட்டிப்பட்டுவிடும் என்ற எண்ணத்தில் சொல்ல வேண்டாமென்று மட்டும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களே சொன்னார்கள்—'சமாதானமாகச் சென்ற ஊர்வலத்தைத் தாக்கினார்கள்' என்று ஏற்கனவே திருப்பித் திருப்பி வலியுறுத்தப்பட்டுவருகிறது; இப்பொழுதும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்; ஊர்வலத்திற்கு அனுமதி கொடுக்கின்ற நேரத்தில் ஊர்வலம் என்ன என்ன வழியாகச் செல்ல வேண்டுமென்று ஒரு 'ரெகுலேட்டரி ஆர்டர்' வழங்கப்படும்; அந்த வழியாகச் சென்ற யார்மீதும் போலீசார் தாக்குதல் நடத்தவில்லை—தாக்க வேண்டிய நிலைமை ஏற்படவில்லை. அனுமதிக்கப்படாமலிருந்த பாதை வழியாக ஊர்வலத்தின் பெரும் பகுதியினர் சென்றுகொண்டிருந்ததற்குப் பின்னர்—பிற்பகுதியினர் வேறு பக்கத்திற்குச் செல்ல முயற்சித்த நேரத்தில் அவர்கள் கலைக்கப்பட்டார்கள்.

கலைக்கப்பட்ட நேரத்தில் தடியடி நடத்தப்பட்டது என்பதுதான் எனக்குக் கிடைத்த தகவல்; அந்தத் தகவல்தான் பத்திரிகையிலும் வந்திருக்கிறது.

ஊர்வலத்தின் முன் பகுதி கிட்டத்தட்ட கண்ணப்பர் திடலை நோக்கி நடந்துகொண்டிருந்தது; பிற்பகுதியினர் அனுமதிக்கப்படாத பாதை வழியாக வேறு பக்கம் செல்ல முயற்சித்ததால் கலைக்கப்பட்டார்கள். அவர்கள் தாக்க வேண்டுமென்று தாக்கியிருப்பார்களேயானால் நான் கண்டிப்பேன்.

ஊர்வலம் நடத்துவது என்பது சனநாயகமுறைகளில் ஒன்று. ஒதுக்கப்பட்டிருக்கிற பாதையைவிட்டு வேறு பா[illegible]தை வழியாகச் செல்லும்போது சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் அவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியமும், கலைக்க வேண்டிய அவசியமும் போலீசைச்சார்ந்தது.

'கடுமையான தடியடி நடந்தது' என்ற குற்றச்சாட்டு சொன்னார்கள், உடனடியாக நான் போலீசு அதிகாரியிடம் கேட்டு முழுவிவரங்களையும் பெற்றுக்கொண்டேன்.

இப்பொழுது நான் சொல்லப்போவது, நடைபெற்றதற்குச் சமாதானம் என்று நினைக்க வேண்டாம்; நாங்களும் தடியால் தாக்கப்பட்டோம். எங்களுக்கு அனுதாபத் திர்மானம்--இல்லை; சென்னை மருத்துவமனையிலே சேர்ப்பதற்குக்கூட வசதியற்ற நிலையில்--சென்னையைச் சுற்றியுள்ள மருத்துவமனைகளில் எங்களுடையதோழர்கள் கவனிக்கப்படுகின்ற அளவுக்குத் தாக்குதலுக்கு ஆளானார்கள்.

ஆகையால், 'இதைச் செய்கிரோம்' என்று நினைத்தால், எனக்கு ஈர மனது இருப்பதாகச் [illegible] நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்---த[illegible]டி பற்றி உறுப்பினர்கள் கருத்துச் சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் இதைச் சொல்லுவது, நடைபெற்றதற்குச் சமாதானமல்ல; ஆனால், இது பெரிதுபடுத்தப்படுவதற்குக் காரணம், அரசியல் நோக்கத்தோடு அரசியல் பிரச்சாரத்திற்காகத்தான் என்பதை நான் எடுத்துச் சொல்லாமல் இருப்பதற்கில்லை..

கே. விநயகம்:—“நமது முதலமைச்சர் அவர்கள் இந்த ஊர்வலத்தில் ஏற்பட்ட தடியடி பற்றி விவாதித்துக்கொண்டு வரும்போது, 'அவர்கள் திசை மாறிப் போவதற்காகத்தான் நாங்கள் அடித்தோம்---அதாவது, போலீசு அதிகாரிகள் அடித்தார்கள்' என்று சொன்னார்கள்.

திசை மாறிப்போன இடத்தில் அடித்தீர்களா? அல்லது மூர் மார்க்கெட் வரையில் பின் தொடர்ந்து அடித்தீர்களா? அதேபோன்று சிந்தாதிரிப்பேட்டை வழியாகப் போனவர்களை அடித்த காரணம் என்ன? போலீசுக் கமிஷனர் காலையில் ஒரு அறிக்கை கொடுக்கிறார்--மாலையில் ஒரு அறிக்கை கொடுக்கிறார்; ஒரே ஒரு முறை அடித்ததாகச் சொல்கிறார்; 600 பேரை ஒரே ஒரு முறை அடித்தார்களா? தொடர்ந்து அடித்தார்களா? அவர் சொல்லுவதிலே முரண்பாடு இருக்கிறதே! 'இதையெல்லாம் நீங்கள் பார்த்தீர்களா?' என்று எங்களைப் பார்த்துக் கேட்டீர்களே--நீங்கள் இதையெல்லாம் பார்த்தீர்களா?

'போலீசு அதிகாரிகளை அதிகமாக நம்பாதீர்கள்; உங்கள் அதிகாரிகள் சொல்லுகிறார்களே--நியாயமாகத்தான் இருக்கும்' என்று நீங்கள் அவர்களை நம்பி முடிவு செய்துவிட்டால், எங்களுக்கு நேர்ந்த கதிதான் உங்களுக்கும் ஒரு நாள் வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்,”

(4-ம் பக்கம் பார்க்க)

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஆவணி 5 (20—8—68) செவ்வாய்

‘தமிழ்நாடு’ வாழ்க--வெல்க!

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், ‘மெட்ராஜ் பிரசிடென்சி’ என்றும், இந்தியத் துணைக்கண்டம் சுதந்தரம் பெற்றதற்குப் பின்னர், மெட்ராஜ் ஸ்டேட்’ அல்லது ‘சென்னை ராஜ்யம்’ என்றும் பெயரிட்டு அழைக்கப்பட்டுவந்த நமது தமிழகம், தனக்குரிய ‘தமிழ்நாடு’ என்ற இயற்பெயரிட்டு அழைக்கக்கூடிய நற்பேற்றினை இனிப் பெறப்போகிறது. இப்பெயரை ஏற்று—அதற்கு சட்ட வடிவம் கொடுக்க—அதற்கான மசோதாவை இந்திய அரசு உருவாக்கி உள்ளது.

தமிழக சட்டப் பேரவையின் கருத்தறிய அப்பெயர் மாற்ற மசோதாவை--இந்தியக் குடியரசுத் தலைவர்--தமிழக அரசுக்கு அனுப்பியிருந்தார். அம்மசோதாவிற்கு ஒப்புதல் தரக்கூடிய வகையில் தீர்மானம் ஒன்றை உருவாக்கி, முதலமைச்சர், சட்டப் பேரவையிலும், மேலவையிலும் கொண்டுவந்து, உறுப்பினர் அனைவரின் ஒப்புதலைப் பெற்று நிறைவேற்றியுள்ளார்.

‘சென்னை ராஜ்யம்’ என்ற பெயருக்குப் பதிலாகத் ‘தமிழ்நாடு’ எனப் பெயரிட வேண்டும் எனக் கோரும் தீர்மானம் ஒன்றை—இதற்கு முன்னர் காங்கிரசு ஆட்சிக் காலத்தில்—கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொண்டுவந்திருந்தனர். அப்பொழுதே அத்தீர்மானத்தை அன்றையக் காங்கிரசுக் கட்சியினர் ஏற்றுக் கொண்டிருக்கும்பட்சத்தில், ‘சென்னை ராஜ்யம்’, ‘தமிழ்நாடு’ என அழைக்கப்படக்கூடிய நிலையை, சில ஆண்டுக் காலத்துக்கு முன்பே அடைந்திருக்கும்.

ஆனால், கழகத்தவர் கொண்டுவந்த ‘தமிழ்நாடு’ என்ற பெயர் மாற்றத் தீர்மானத்தை அன்று காங்கிரசுக் கட்சியினர் ஏற்க மறுத்துவிட்டதுடன், தங்கள் எதிர்ப்புக்கு விசித்திரமான காரணங்களையும் கூறினர்.

அன்று விசித்திரமானதும் பொருத்தமற்றதுமான காரணங்களைக் காட்டி, அப்பெயர் மாற்றத் தீர்மானத்தைத் தீவிரமாக எதிர்த்த அதே காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த இன்றைய சட்டப் பேரவை உறுப்பினர்கள்---புதிய கண்ணோட்டம் பெற்று---முதல்வர் கொண்டுவந்த அதே கருத்துடைய தீர்மானத்தை ஆதரித்துள்ளனர்.

அன்று கொண்டுவந்த பெயர் மாற்றத் தீர்மானத்தை எதிர்த்ததுபோல் இன்றும் எதிர்க்காமல், தீர்மானம் ஒருமனதாக நிறைவேற ஒத்துழைப்புத் தந்துள்ளமைக்காக, அவர்கள் பாராட்டுக்குரியவர்களாகின்றனர். என்றாலும், அந்த நாளில் அவர்கள் காட்டிய எதிர்ப்பினை, எவ்வளவு முயற்சித்தாலும் தமிழ் மக்களால் மறந்துவிட முடியாது.

‘சென்னை ராஜ்யம்’ என்ற பெயருக்குப் பதிலாகத் ‘தமிழ்நாடு’ என்ற பெயர் மாற்றத்தை, தாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்திலேயே செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருப்பார்களானால், இன்று, தமிழ்நாட்டுக்குத் ‘தமிழ்நாடு’ என்று சட்டப்படி பெயர் வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெறுவதற்கான அரிய வாய்ப்பு நமது கழகத்துக்குக் கிடைத்திருக்கவே இராக்காது. தங்களையும் அறியாமல், இத்துறையில் கழக ஆட்சிக்கு வாய்ப்பைத் தேடித் தந்தமையைக் கருத்தில்கொண்டு, இப்பெயர் மாற்றப் பிரச்சினையில் அன்று காங்கிரசு ஆட்சியினர் கொண்டிருந்த மனப்போக்கை, நாம் மறந்துவிடுவோமாக!

‘என்றென்றும் நாமே தமிழக ஆட்சிப்பீடத்தில் இருந்திடப் போகின்றோம்’ என்ற முடிவும், ‘தமிழக ஆட்சிப்பொறுப்பு என்றென்றும் கழகத்துக்குக் கிட்டப்போவதில்லை’ என்ற நம்பிக்கையும் அன்றையக் காங்கிரசு ஆட்சியினர் கொண்டிருந்த காரணத்தினாலோ என்னவோ---கழகத்தவர் கொண்டுவந்த பெயர் மாற்றத் தீர்மானத்தை அன்று காங்கிரசுக் கட்சியினர் எதிர்த்துத் தோற்கடித்துள்ளனர்.

தங்கள் ஆட்சி 1967-ம் ஆண்டுடன் தமிழகத்தில் முற்றுப் பெற்றுவிடும்---அவ்வாட்சிப் பொறுப்பில் கழகத்தை மக்கள் அமர்த்திவிடக்கூடும்---என்ற ஐயப்பாடு சிறிதளவாவது அப்பொழுது தங்களுக்கு இருந்திருக்கும்பட்சத்தில், ‘கழகத்தைச் சேர்ந்தவர்கள் பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டுவரட்டும்’ எனக் காத்திராமல், தங்கள் சார்பிலேயே ஒரு பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அப்பொழுதே காங்கிரசு ஆட்சியினர் நிறைவேற்றி வைத்திருப்பர். 1967-ம் ஆண்டு பொதுத்தேர்தலில்---தமிழகத்தைப் பொறுத்த வரையில்---மக்கள் தங்கள் ஆட்சிக்கு இறுதியான முடிவுகட்டிவிடுவர் என, அன்றையக் காங்கிரசு ஆட்சியினர் எதிர்பார்க்கத் தவறிவிட்டனர். அன்று அவர்கள் அறியாமல் செய்துவிட்ட தவறு, இன்று நமது கழக ஆட்சிக்கு அரிய வாய்ப்பாக அமைந்துவிட்டிருக்கிறது.

அன்றே காங்கிரசு ஆட்சியினர், பெயர் மாற்றத்துக்குச் சட்டப்படி ஏற்பாடு செய்திருப்பார்களானால், அப்பெயர் மாற்றத்தை மையக் கோரிக்கையாக வைத்து உண்ணாநோன்பிருந்து உயிர் துறந்த உத்தமர் விருதுநகர் சங்கரலிங்கனார் அவர்களின் உயிரைக் காப்பாற்றி இருக்கமுடியும். காங்கிரசு ஆட்சிமீது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்ச்சிக்கான காரணங்களில் ஒன்று குறைந்தும் இருக்கும்.

இப்பொழுது சட்டப் பேரவையில் முதல்வரால் கொண்டுவரப்பட்ட பெயர் மாற்றத்தை ஆதரித்துப் பேசிய சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், “எங்கள் தேசிய வழியில் வந்த பாரதியார்தான், ‘செந்தமிழ் நாடெனும் போதினிலே’ என்ற பாட்டையே பாடி இருக்கின்றார்” எனக் குறிப்பிட்டு, தீர்மானத்துக்குத் தம் ஆதரவைத் தந்துள்ளார். பாரதியார் அப்படிப் பாடியிருப்பது, கழகம் ஆட்சிக்கு வந்த 1967-ம் ஆண்டுக்குப் பின்னர் அல்ல. அப்பாட்டு, ஏறத்தாழ நாற்பது ஆண்டுக் காலத்துக்கு முன்பே அவரால் பாடப்பட்டிருப்பதாகும். அப்பாட்டிலுள்ள கருத்து, ஏற்கனவே ஆட்சிப் பொறுப்பிலிருந்த காங்கிரசுத் தலைவர்களுக்கும் தெரியும். அப்பாட்டின் கருத்தை அன்றையக் காங்கிரசு ஆட்சியினர் மறந்து அல்லது அலட்சியப்படுத்தி, ‘தமிழ்நாடு’ எனப் பெயரிட முடியாது என மறுத்து வந்திருப்பதும், ‘செந்தமிழ் நாடு’ எனப் பாடி மகிழ்ந்துகொண்டிருந்த பாரதியாருக்குத் துரோகம் செய்திருப்பதும் ஏன் என்பதுதான் கேள்வி!

‘தமிழ்நாடு’ என்ற பெயர் மாற்றப் பிரச்சினையில், அன்றையக் காங்கிரசுக் ஆட்சியினர் எப்படி நடந்துகொண்டிந்தபோதிலும், இன்றுள்ள காங்கிரசுக் கட்சியினர், முதல்வர் தீர்மானத்துக்கு மனமுவந்து ஆதரவு தந்துள்ளனர். அதற்காக, அவர்களுக்கு நமது பாராட்டு.

‘தமிழ்நாடு’ என்ற பெயர் மாற்றத் தீர்மானத்தின்மீதும், மூலத் தீர்மானத்துக்கு முதல்வரே கொண்டுவந்த திருத்தத்தின் மீதும், சட்டப் பேரவையில் விவாதம் நடைபெற்றது. நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கும் முறையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள், சிந்தனை விருந்தாகச் சில கூறியுள்ளார்கள். முதல்வர் தந்துள்ள விளக்கத்தில், ‘தமிழ்நாடு’ என்ற பெயர் மாற்றம் பற்றிய கருத்து விளக்கமும் அமைந்திருக்கிறது. அது, இது:—

“திருத்தங்களைக் கொண்டுவந்தவர்கள், பல நல்ல காரணங்களை எடுத்துக் காட்டினாலும், அரசு கொண்டுவந்த திருத்தத்தை ஏற்றதற்காக நன்றி தெரிவிக்கிறேன். இப்படி ஒரு தீர்மானத்தின்மீது ஏற்கனவே இந்த மன்றத்தில் விரிவாக விவாதித்திருக்கிறோம்.

“‘தமிழ்நாடு’ என்று பெயர் வைக்க ஆதாரம் தேடி--சான்று காட்டி வாதாட வேண்டிய காலமும் இருந்தது. இந்த நல்ல நேரத்தில் அதைப் பற்றியெல்லாம் நினைக்காமல் இந்தத் தீர்மானத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள் என்று அறிவிப்பதில் பெருமைப்பட்டுக் கொள்ளவேண்டும். கடந்தகால சம்பவங்களை மகிழ்ச்சிகரமான இந்த நேரத்தில் மறந்துவிட வேண்டும். தமிழகத்தின் சார்பில் இந்த மசோதாவை ஏற்பதில் அனைவரும் ஒன்றுபட்டிருக்கிறார்கள் என்பதைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

“கடந்தகால நிகழ்ச்சிகளை மறந்துவிட வேண்டும் என்றாலும், ஒரே ஒரு நெஞ்சுருக்கும் நிகழ்ச்சியை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ‘தமிழ்நாடு’ என்று பெயர் வைக்கும்படி கோரி விருதுநகர் சங்கரலிங்கனார் பலநாள் உண்ணாநோன்பு இருந்தார்; அணு அணுவாகத் தன்னையே வதைத்துக் கொண்டு இந்த இலட்சியத்திற்காக மரணமடைந்தார். அவர் காலமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னால் நான் அவரைச் சந்தித்துப் பேசினேன்; ‘உங்கள் கோரிக்கை நிறைவேற நாங்கள் முயற்சி எடுக்கிறோம்; உண்ணாநோன்பைக் கைவிடுங்கள்’ என்று அவரிடம் நான் கோரினேன்; ‘அந்த அளவுக்கு உங்களுக்கு அரசியல் வலிவு இல்லை; என்னைத் தடுக்காதீர்கள்; நான் இறப்பதால் ஓர் புத்துணர்ச்சி ஏற்படுமானால், நான் இறப்பதில் நட்டம் இல்லை’ என்று அந்தப் பெரியவர், உள்ளம் உருகக் கூறினார். அந்தப் பெரியவரின் உறுதி---பேரெழுச்சி --- தன்னைத்தானே தியாகம் செய்துகொண்ட பேருள்ளம் ஆகியவைகளுக்கு அஞ்சலி செலுத்தி இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி தெரிவிக்கிறேன்.

“‘ழ’கரத்திற்குப் பதிலாக வேறு எழுத்தைப் பயன்படுத்துவது பற்றிக் குறிப்பிட்டார்கள். என்னதான் முயற்சி செய்து கற்றுக்கொடுத்தாலும் வட இந்தியர்களுக்கு ‘ழ’கர உச்சரிப்பு வரவில்லை.

“‘கழகம்’ என்று சொல்லிக் கொடுத்தால், ‘கஜகம்’ என்றுதான் அவர்கள் உச்சரிக்கிறார்கள். இந்திய அரசில் உள்ள மிகப் பெரிய தலைவர்களில் ஒருவர், ‘ழ’கரத்தைக் கொண்டு வந்து தொல்லை கொடுத்துவிடாதீர்கள்---என்று என்னிடம் கூறினார். அவர்களின் வசதிக் குறைவையும், ஆங்கிலத்தில் ‘ழ’கரத்திற்குச் சரியான முறையில் எழுதமுடியாது என்பதையும் கவனிக்க வேண்டும்.

“தமிழ் மொழியில் உள்ள ஒரு எழுத்துக்கு வேறு மொழியில் உள்ள பல எழுத்துக்களைப் போட்டாலும், ‘ழ’கரத்திற்கு ஈடாகாது. இதைத் தமிழுக்கு உரிய சிறப்பாகக் கருதுவோம்.

“‘ழ’கரம் நம்மோடு பிறந்து---நம்மோடு இருப்பது; இது நமக்கென்றே இருக்கட்டுமே; முக்கியமாக, ‘சென்னை ராஜ்யம்’ என்பது ‘தமிழ்நாடு’ என்று பெரிய மாற்றம் பெறுவதைத்தான் நாம் இங்கே கவனிக்க வேண்டும்.”

—கா. க.

முதலிடம் பெறுகிறார் மொரார்ஜி தேசாய்!

புதுடில்லி, ஆக. 20—

மத்திய அரசு அமைச்சர்கள் தங்கள் சொந்த ஊழியர்களுக்காக 1967–68-ஆம் ஆண்டில் ரூ. 25 இலட்சம் செலவிட்டிருக்கிறார்களாம்.

இத்தொகையில் ரூ. 2,30 425.77 செலவு செய்த துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் முதலிடத்தைப் பெறுகிறார்!

அடுத்து ரூ. 1,14,764 செலவு செய்திருக்கிறார் தலைமையமைச்சர் இந்திரா காந்தி!

ரூ. 1,04,641 72 செலவு செய்த பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங், பட்டியலில் மூன்றுவதாக வருகிறார்.

உள்துறை அமைச்சர் சவாண், ரூ. 98,919.84 செலவிட்டிருக்கிறார்.

மிகக் குறைந்த அளவில் செலவு செய்திருப்பவர் கல்வி அமைச்சர் திரிகுணசென் ஆவார்—ரூ. 4,908.

இதுபோல் மாநிலத்தகுதியுள்ள அமைச்சர்களும், துணை அமைச்சர்களும் தத்தம் திறமைக்கேற்ப செலவு செய்து மொத்தம் ரூ. 25 இலட்சத்தை எட்டியுள்ளனர்!

ஒருமைப்பாட்டின் பெயரால் மத்திய அரசு எவ்வாறு செயல்படும்?

கல்வி சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தலைமையமைச்சர் கோருவதற்குக் காரணம் என்ன?

புதுடில்லி, ஆக. 20—

அண்மையில் நடந்த தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, கல்வி சம்பந்தமாக செய்யப்பட்ட பரிந்துரைகள்மீது உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு, மத்தியக் கல்வி அமைச்சரை தலைமை அமைச்சர் கேட்டுக்கொண்டிருக்கிறாராம். கல்வியமைச்சர் கூடிய விரைவில் இது சம்பந்தமான செயலில் இறங்குவார் என நம்பப்படுகிறது.

துவக்கப் பள்ளி முதல் பட்டப் படிப்பு வரை உள்ள கல்வி முறையையே மாற்றியமைக்க வேண்டுமென்பது, தேசிய ஒருமைக் குழுவில் பொதுவாக உருவான கருத்தாகும்.

“கல்வி, ‘நாம் இந்தியர்கள்’ என்ற எண்ணத்தையும், ஒற்றுமையையும, இந்திய சனநாயகத்தின் அடிப்படைத் தத்துவங்களில் நம்பிக்கையையும் புதிய ஒரு நாகரிகச் சமுதாயத்தை உருவாக்க உதவும் வகையில் அமையவேண்டும்” என, குழு கருதுகிறதாம்.

மாநில அரசுகள் நிபுணர்கள் குழுவை அமைத்து பள்ளிகளுக்கு உரிய பாடத் திட்டங்களை வகுக்குமாறு, மத்திய அரசால் கேட்டுக் கொள்ளப்படவிருக்கின்றன.

மத்திய அரசும் இப்படிப்பட்ட ஒரு குழுவை அமைத்து மாநில அரசுகளுடன் கலந்து மாநிலக் குழுக்கலுடன் ஒருங்கிணைந்து செயல்படவிருக்கிறதாம்.

கல்வி வசதிகளைப் பெறுவதில் காணப்பெறும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவதிலும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறதாம்.

இந்திய ஒருமைப்பாட்டின் பெயரால் மேலும் பல திட்டங்களையும் மத்திய அரசு அமுல்படுத்தவிருக்கிறதாம்.

கலைவாணர் நினைவு விழா

ஓர் வேண்டுகோள்

கலைவாணர் நிலையச் சார்பில் திரு. வெ. நாராயணன் அறிவிப்பதாவது:—

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் 12-வது ஆண்டு நினைவு நாள் ஆகஸ்டு 30-ம் நாள் வருகிறது.

இவ்வாண்டு கலைவாணர் நினைவு விழாவை மாநில அமைச்சர்கள், அனைத்துக் கட்சித் தலைவர்கள், முத்தமிழ் வித்தகர்கள், பங்கு கொண்டு சிறப்பிக்கும் வகையில் இயல்—இசை—நாடகம்—திரைப் பட நிகழ்ச்சிகள்—சொற்பொழிவுகளுடன் ஆக. 30, 31-ம் நாட்களில் பாங்குடன் நடத்திட முயன்றுவருகிறோம்.

விழாவிற்கு, தமிழவேள் பி. டி. இராசன் தலைமைதாங்குகிறார். இடம்: கிருஷ்ண கான சபா, தியாகராயநகர், சென்னை-17.

சென்ற ஆண்டு விரிவாக நடைபெற்ற விழாவில் மாநில அமைச்சர்கள் அனைவரும் பங்கு கொண்டதும், சுமார் 50-க்கு மேற்பட்ட சொற்பொழிவுகளுடன் 11 கலை நிகழ்ச்சிகளுடன் -- 20-க்கு மேற்பட்ட கவிஞர்களின் கவி அரங்கத்துடன் வெற்றிகரமாக நடைபெற்றதை நினைவுபடுத்த விழைகிறோம்.

இந்த ஆண்டின் கலைவாணர் நினைவு விழாவின் வெற்றிக்குத் தங்கள் எல்லாவகை ஆதரவுகளையும் வழங்கி பெருமைபடுத்த வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மத்திய அரசுக்கு மாநில அரசுகள் தரவேண்டிய கடன்கள்

புதுடில்லி, ஆக. 19—

மத்திய அரசுக்குத் தமிழக அரசு கடன் பாங்கி ரூ. 317 கோடியாகும்.

எல்லா மாநிலங்களும் சேர்ந்து மொத்தம் ரூ. 5,000 கோடி கடன் செலுத்தவேண்டியுள்ளது.

நடப்பு நிதி ஆண்டுத் துவக்கத்தில் கடன் பாக்கி ரூ. 5,195½ கோடியாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

வட்டக் கழக--வட்டத் தகுதிபடைத்த பெருநகரக் கழகங்களின் தேர்தல்கள்

செயலாளர், மாவட்டப் பிரதிநிதிகள் விவரம்

ஆகஸ்டு 3, 4-ம் நாட்களில் நடைபெற்ற வட்டக் கழக---வட்டத் தகுதிபடைத்த பெருநகரக் கழகத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர், மாவட்டப் பிரதிநிதிகள் விவரம் 10--8--68-ம் நாள் 'நம் நாடு' சிறப்பு இதழில் வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து பிரதிநிதிகளின் விவரம் இங்கு தரப்படுகிறது. (தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர்கள் அனைவரும் மாவட்டக் கழகத் தேர்தலில் வாக்களிக்கும் உறுப்பினர்களாவார்கள்) :—

வட ஆற்காடு

மாவட்டம்

வேலூர் வட்டம்

செயலாளர் :

ஆர். சீனிவாசன், ஒடுகத்தூர்

பிரதிநிதிகள் :

வே. கோ. அரங்கநாதன், வெட்டுவானம்
தோப்பூர் திருவேங்கடம், ஒடுகத்தூர்
க. பஞ்சாட்சரம், மாதனூர்
க. அறிவழகன், ஆவரம்பாளையம்
ஜே. பி. கோவிந்தன், சான்றோர் குப்பம்
டி. அன்னையப்பன், சோழவரம்
கதிர்வேலு, இராசபாளையம்
க. பொ. வரதன், சின்னசேரி
இராசேந்திரன், ஒடுகத்தூர்
எம். வி. சாமி, ஆப்பூர்

திருவண்ணாமலை வட்டம்

செயலாளர் :

எஸ். வி. என். சண்முகம்

பிரதிநிதிகள் :

வே. அ. கிருட்டினன், வேட்டவலம்
வ. குருசாமி, திருவண்ணாமலை
சிவப்பிரகாசம், திருவண்ணாமலை
இரா தருமலிங்கம், திருவண்ணாமலை
பெ. சு. திருவேங்கடம், பெரியகாளாப்பாடி
கு. முத்துசாமி, ஆவூர்
எஸ். முருகையன் எம்.எல். ஏ., திருவண்ணாமலை
எச். ஜி. வெங்கடகிருட்டினன், நவம்பட்டு
என். கோதண்ட ராமன், திருவண்ணாமலை

போளூர் வட்டம்

செயலாளர் :

டி. பி சீனுவாசன், போளூர்

பிரதிநிதிகள் :

எஸ். கணபதி, போளூர்
சி. சின்னத்தம்பி, போளூர்
ம. சக்கரபாணி, போளூர்
பி. கிருட்டினன், போளூர்
டி. வி. இராமபத்திரன், தென்மகாதேவமங்கலம்
சி. கோ. ஞானசேகரன், சின்ன புட்பகிரி
கே. அண்ணாமலை, சின்னக்காலூர்
சே. சி. கோவிந்தசாமி, களம்பூர்
ஆ. சின்னதம்பி, விண்ணுவாம் பட்டு
பி. ஆர். முத்தசாமி, டத்தியவாடி

சேலம் மாவட்டம்

சங்ககிரி வட்டம்

செயலாளர் :

ப. பண்டரிநாதன், இடைப்பாடி

பிரதிநிதிகள் :

நா. நடேசன், இடைப்பாடி
சி. இராமசாமி, எல்லப்பாளையம்
ஆர். வி. பெருமாள், இடைப்பாடி
எல். சே. இராமு, ஒடகா...டூர்
ஏ. கே. பெரியண்ணன், வாளன்வளவு
வே. சு. மணி, வேலாண்டிவலசை
வி. எம். இராமசாமி, வைகுந்தம்
கா. கந்தசாமி, காடையம்பட்டி
கொ. ஆ. வெங்கடாசலம், வெங்கடாபுரம்
சேட்டு டி. முத்து, இடைப்பாடி

சேலம் நகரம்

செயலாளர் :

சி. பழனியப்பன் எம்.சி., அன்னதானப்பட்டி சேலம்-2

பிரதிநிதிகள் :

ஈ. ஆர். கிருட்டினன் எம்.எல்.ஏ, சேலம்-1
கே. செயராமன் எம்.எல் ஏ, குகை, சேலம்-6
ஈ. ஏ. ஆர். ரெங்கநாதன், அம்மாபேட்டை, சேலம்-1
சிற்றுளி சுப்பிரமணியம், சேலம்-1
எஸ். மாதவன், சேலம்-1
எஸ். மெய்யப்பன் எம் சி., சேலம்-2
பி. கந்தசாமி, சேலம்-1
சி. இரத்தினசாமி, சேலம்-1
பி. மாதப்பன், சேலம்-6

கோவை

மாவட்டம்

திருப்பூர் நகரம்

செயலாளர் :

இரா. முருகேசன், திருப்பூர்-1

பிரதிநிதிகள் :

எம். பி. கிட்டப்பன், திருப்பூர்-4
டி. வி. கிருட்டினன், திருப்பூர்-4
ம. குப்புசாமி, திருப்பூர்-2
இரா. சண்முகம், திருப்பூர்-1
வே. சுப்பிரமணியம், திருப்பூர்-4
ப. சோமசுந்தரம், திருப்பூர்-1
சு. துரைசாமி எம்.எல்.ஏ., திருப்பூர்-1
ப. நடராசன், திருப்பூர்-1
மு. பழனிசாமி, திருப்பூர்-1
ஜி. வி. முத்து, திருப்பூர்-1

ஈரோடு வட்டம்

செயலாளர் :

எஸ். ஆர். சென்னியப்பன், செலம் டக்கவுண்டம்பாளையம்

பிரதிநிதிகள் :

கே. ஆர். குழந்தைசாமி, குப்டம்பாளையம்
சே. டி. ஈஸ்வரன், குளத்துப்பாளையம்
எஸ். எம். இராமசாமி, சோளக்காளிபாளையம்
ஏ. கே. சுந்தரம், காளிங்கராயன் புதூர்
இரா. சுப்பிரமணி, பள்ளக்காட்டு புதூர்
அ. ச. ஐயாவு, முகாசி அனுமன்பள்ளி
சி. எம். சுப்பிரமணியம், சில்லாங்காட்டுவலசு
மணிமுடி, சோளக்காளிபாளையம்
அழ. வீரப்பன், கொமாரபாளையம்
பி. சுப்பண்ணன், தாமரைப்பாளையம்

உடுமலை வட்டம்

செயலாளர் :

க. பருவதக்கண்ணன், உருத்திராபாளையம்

பிரதிநிதிகள் :

தி. மாரிமுத்து, தளி
பி. மாரிமுத்து, கொமரலிங்கம்
சி. தங்கவேல், குமணநகர்
எஸ் நடராசு, குறிச்சிக்கோட்டை
கே. இராமசாமி, கண்ணமநாயக்கனூர்
பி. பெரியசாமி, தளி
மா. பொற்செழியன், பூளவாடி
பி. பழனிச்சாமி, கண்ணமநாயக்கனூர்
எஸ் திருமலைசாமி, தேவனூர்புதூர்
எம். எஸ். மணி, உடுமலை

அவினாசி வட்டம்

செயலாளர் :

மே சி. தூயமணி, செல்வம் நகர், இடையர்பாளையம் பிரிவு

பிரதிநிதிகள் :

க. அரங்கசாமி, சிறுமுகை
சிறு. அர. ரகுநாதன், சிறுமுகை
க. இராசு, அவினாசி
தி. சு. அரங்கசாமி, திம்மம்பாளையம்
கா. மா. குருசாமி, கருவலூர்
சி. பாலகிருட்டினன், இராசடி
கா. இரா. அரங்கநாதன், காரமடை
ப. தி சுப்பையன், பகத்தூர்
கு. முத்துசாமி, திருப்பூர்-3
எம். ஏ. இரசாக், மேட்டுப்பாளையம்

பொள்ளாச்சி வட்டம்

செயலாளர் :

ந. மயில்சாமி

பிரதிநிதிகள் :

மு. தேவராசன் எம்.சி.
ஈஸ்வரன்
ஆர். சுப்பிரமணியம்
தி. சதாசிவம்
சேரன்
பி. கே. எஸ். மணி
ஏ. ஆறுமுகம்
பி. எஸ். வேலுசாமி
கே. பொன்னுசாமி
தா. காதர்

முகவரி மாற்றம்

எம். எம். முத்தரசு,
மாவட்ட தி. மு கழகம்,
224, மேலமாசி வீதி,
மதுரை-1.

முகவரி

மணி—சாமி கலைக்குழு
மு. கருணாநிதி படிப்பகம்,
இராசபாளையம்,
முடவை மாவட்டம்.

புலவர் சி இராசு,
பாவட்ட தி மா. மு. க. செயலர்,
அம்மாபாளையம் (அஞ்சல்),
பெரம்பலூர் வட்டம்,
திருச்சி மாவட்டம்.

சி. தஞ்சைதம்பி பி.எஸ் சி,
திட்டாணிமுட்டம்,
திருவிடவாசல் (அஞ்சல்)
(வழி) கொரடாச்சேரி.

தென்னகப் பல்கலைக் குழுவினர் அளிக்கும்

கருத்துமிக்க --- கழகப் பிரச்சார

இரு கலை நிகழ்ச்சிகள்

விஜயா குழுவினரின்	சதாசிவம் குழுவினரின்
'ஆளுகின்றார் அண்ணா'	'அண்ணாவின் அரசு'
கதா காலட்சேபம்	கலை நிகழ்ச்சி

நிகழ்ச்சி தொடர்புக்கு :—மு. வரதராசன், செயலாளர்,
325, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-5

ஒசூர் வட்ட தி. மு. க. தேர்தல்

தருமபுரி மாவட்டம் ஒசூர் வட்ட தி. மு. கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அவைத் தலைவர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், மாவட்டப் பிரதிநிதிகள் இரண்டுபேர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் 25-8-68 காலை 10-மணிக்கு ஒசூர் பயணிகள் விடுதியில் நடைபெறும்.

மேற்காணும் பொறுப்புகளுக்கு மேலும் வேட்பு மனு அனுப்ப விரும்பும் தோழர்கள் முறைப்படி 22-8-68 மாலை 6-மணிக்குள் தலைமைக் கழகத்திற்குச் சேரும் வகையில் அனுப்ப வேண்டுமென்று அறிவித்துக் கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

ஒசூர் வட்டப் பிரதிநிதிகட்கு

அறிவிப்பு

ஒசூர் வட்ட தி. மு. கழகத்திற்குத் தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்புகளுக்காக 25-8-68 ஆம் நாள் காலை 10-மணிக்கு ஒசூர் பயணிகள் விடுதியில் நடைபெறவிருக்கும் தேர்தலின்போது, ஒசூர் வட்ட தி. மு. க. பிரதிநிதிகள் ஏற்கனவே தங்கள் தங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கும் பிரதிநிதிச் சீட்டைக் காண்பித்தே தேர்தல் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் என்பதும், 25-ஆம் நாள் தேர்தலுக்காகத் தனியாகப் பிரதிநிதிச் சீட்டுகள் அனுப்பப்படவில்லை என்பதும் தெரிவித்துக் சொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

வட்ட --- மாவட்ட தி.மா.மு.க. தோழர்கட்கு

தென் மாவட்ட தி. மா. மு. க. பொறுப்பாளர் கா. காளிமுத்து பின்வருமாறு அறிவிக்கிறார் :—

கீழே குறிப்பிடுள்ள மாணவர் தோழர்களிடம் தொடர்புகொண்டு அந்தந்த வட்ட--மாவட்டத் தோழர்கள் தி. மா. மு. க. உறுப்பினர் படிவங்களைப் பெற்றிட வேண்டுகிறேன்.

குமரி மாவட்டம் :

மி. என். இராமச்சந்திரன்
புஷ்பா மடம், மீனாட்சிபுரம்,
நாகர்கோயில்

நெல்லை மாவட்டம் ;
திருச்செந்தூர் வட்டம் :—

சேதுநம்பி,
தி. மா. மு. க. அமைப்பாளர்,
ஆழ்வார் திருநகரி,
திருச்செந்தூர் (வட்ட...
நெல்லை (மாவட்டம்)

முகவை :—

இரா. முத்துராமலிங்...
1, கூட்டுறவுப் பண்...
சிவகங்கை

வெ. கண்ணன் நிகழ்ச்சிகள்

ஆக. 20: அரூர்; 21: தர்மபுரி; 22: தர்மபுரி வட்டம்; 25: சிவகாசி; 27: மன்னார்குடி; 28: திட்டக்குடி; 29: விருத்தாசலம்.

தமிழக மின்சார வாரியம்

டெண்டர் அறிக்கை

குறிப்பு எண் கே. சி. 140

டெண்டர் பிரதி விலை ரூ. 10·30

தமிழக மின்சார வாரியம், கோதையாறு நீர் மின் திட்டம்—Supply of Gunmetal Bearings for crushers.

குறிப்பு எண் K.C. 140

தமிழக மின்சார வாரியத்தின் சார்பாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புக்களுடன் டெண்டர்தாரரின் பெயரும் மேலுறையில் எழுதப்பட்டு மூடி, அரக்கு முத்திரையிட்ட டெண்டர்கள் கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் அவரது அலுவலகத்தில் 18—9—68 பிற்பகல் 3-00 மணி வரையில் பெற்றுக்கொள்ளப்படும். டெண்டர்கள் அதே நாளில் இவ்வலுவலகத்தில் பிற்பகல் 4-00 மணிக்கு வந்திருக்கும் டெண்டர்தாரர்கள் அல்லது அவர்கள் பிரதிநிதிகளின் முன் திறக்கப்படும்.

2. டெண்டர் பிரதிகள் 12—8—68-ந் தேதியிலிருந்து விற்பனைக்குக் கிடைக்கும். டெண்டர் பிரதிகள் வேண்டுவோர், ஒவ்வொரு பிரதிக்கும் ரூ. 10.30 (ரூபாய் பத்தும் பைசா முப்பது மட்டும்; விற்பனை வரி உட்பட) வீதம் செலுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்திலிருந்து பெறலாம். இத்தொகையானது எக்காரணத்தை முன்னிட்டும் திருப்பித் தரப்படமாட்டாது.

3. மேலே குறிப்பிட்டுள்ள சப்ளைக்கான டேவணித் தொகை (Earnest Money Deposit) ரூ. 5000 (ரூபாய் ஐந்து ஆயிரம் மட்டும்) கீழே கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் செலுத்தப்பட்டு அதற்கான செலுத்துச் சீட்டு டெண்டருடன் இணைக்கப்பட வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் செக்குகள்(Cheques) ஏற்கப்படமாட்டா. டேவணித் தொகையின்றி சமர்ப்பிக்கப்படும் டெண்டர்கள் கட்டாயமாக நிராகரிக்கப்படும்.

4. இவ்வலுவலகத்தின் மனுபாரத்தில் இல்லாத டெண்டர்களும், குறித்த காலம் தள்ளி வரும் டெண்டர்களும் கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. மேலே குறிப்பிட்டுள்ள பொருட்கள் சப்ளை செய்தலை, சில அல்லது எல்லா டெண்டர்தாரர்களுக்குப் பகிர்ந்து வழங்குதற்கோ அல்லது சில டெண்டர்களையோ, எல்லா டெண்டர்களையுமோ காரணம் தெரிவிக்காமல் நிராகரிக்கவோ கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு உரிமையுண்டு.

5. டெண்டர் பிரதிகள் சாதாரணத் தபாலிலேயே அனுப்பப்படும். தபால் போக்குவரத்தில் ...தாமதம் ஏற்படினும், டெண்... பிரதிகள் தொலைந்து போனா...வ்வாரியம் பொறுப்பல்ல.

மேற்பார்வைப் பொறியாளர்,
கோதையாறு நீர் மின் திட்டம்,
கோதையாறு கீழ் முகாம்

ரூ. 116 கோடிக்குக் கடன் பத்திரங்கள்

15 மாநில அரசுகள் வெளியிடுகின்றன

பம்பாய், ஆக 19—

தமிழக அரசு உட்பட 15 மாநில அரசுகள் இந்த ஆண்டு மொத்தம் ரூ. 116 50 கோடிக்குப் புதிய கடன்களை எழுப்புகின்றன.

தமிழக அரசு மொத்தம் ரூ. 18 கோடிக்கு கடன் எழுப்புகிறது.

இந்தக் கடன்கள் 1980-ல் திருப்பித் தரப்படும்; இந்தக் கடன்களுக்கு ஐந்தேமுக்கால் சதவிகிதம் வட்டி கிடைக்கும்.

இந்தக் கடன்களுக்குச் செப்டம்பர் 2-ம் நாளிலிருந்து சந்தா ஏற்றுக் கொள்ளப்படும்; 7-ம் நாள் சந்தா பெறுவது நிறுத்தப்படும். அதற்கு முன்னதாகவே கோரிய தொகை வசூலாகிவிட்டால், 7-ம் நாளுக்கு முன்பே சந்தா பெறுவது நிறுத்தப்படும்.

தமிழக அரசு வெளியிடும் ரூ 100 மதிப்புள்ள கடன் பத்திரத்தின் வெளியீட்டு விலை ரூ. 98 ஆகும்.

கட்டபொம்மன் பரம்பரைக்கு டெல்லி கைவிரிப்பு

நிறுத்திய உதவித் தொகையை மீண்டும் வழங்க மறுப்பு

மேலவையில் அண்ணா அளித்த விளக்கம்

சென்னை, ஆக. 19—

"கட்டபொம்மன் பரம்பரையைச் சேர்ந்தவர்களுக்குத் தரப்பட்டுவந்த உதவித் தொகையைத் தொடர்ந்து வழங்கும்படி வந்த வேண்டுகோளை இந்திய அரசு மறுத்துவிட்டது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற மேலவையில், கேள்வி நேரத்தின்போது தெரிவித்தார். மேலும் அவர் விளக்கியதாவது :—

"கட்டபொம்மன் குடும்பம் சிறைபட்டபோது அது 8 பேர்களைக் கொண்டதாக இருந்தது; அவர்களுக்கு 15 வராகன் ரூ. 52.50 உதவி ஊதியம் வழங்கப்பட்டது. அந்தத் தொகை பின்னர் 40 வராகனுக்கு (ரூ. 140) உயர்த்தப்பட்டது.

"அந்தக் குடும்பத்தில் ஒருவராகிய கம்பளிச்செல்வம் ரூ. 52.50 பெற்று வந்தார். மற்ற பங்குகள் அனைத்தும் பரம்பரை உரிமையுடையோர் இல்லாத காரணத்தினால் நிறுத்தப்பட்டன என்று தோன்றுகிறது.

"கம்பளிச்செல்வம் 1871-ல் இறந்தபோது அவருக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை அவருடைய மூத்த மகன் தளவாய் குமாரசாமித் துரைக்குத் தொடர்ந்து வழங்கப்பட்டது.

அவர் 1920-ல் இறந்தபோது, அவருக்கு வழங்கப்பட்ட உதவித் தொகையாகிய ரூ. 52.50 ரூ 50 ஆகக் குறைக்கப்பட்டு அவருடைய மகன் ஜெயவீரராம கட்டபொம்மன் கம்பளிச்செல்வம் துரைக்கு வழங்கப்பட்டது. அவர் 1935-ல் இறந்தபோது அந்த உதவித் தொகையில் மீண்டும் ரூ. 2.50 குறைக்கப்பட்டு, ரூ. 47.50 ஆக மாற்றப்பட்டது. அத்தொகை, அவருடைய சகோதரர் தளவாய் சுப்பிரமணிய துரைக்கு வழங்கப்பட்டு வந்தது.

"திரு. சுப்பிரமணிய துரைக்கு 1—11—1944-லிலிருந்து மாதத்திற்கு ரூ. 5 உதவித் தொகை தற்காலிகமாக உயர்த்தப்பட்டது; அவர் 1—6—1958-ல் இறந்துவிட்டார்; அந்த உதவித் தொகை, அதனைப் பெறுகின்றவர் இறக்கும்போது அடியோடு இறுதியடைந்துவிடத்தக்க ஆயுள் உதவி ஊதியமாகும்; எனவே அவருடன் அது அடியோடு நிறுத்தப்பட்டது.

"காலஞ்சென்ற சுப்பிரமணிய துரையின் மகள் திருமதி பாஞ்சாலி அம்மாள், அவருடைய தந்தை பெற்றுவந்த உதவித் தொகையைத் தொடர்ந்து வழங்குமாறு அரசாங்கத்தை வேண்டினர்; இந்த வேண்டுகோளை இந்திய அரசு மறுத்துவிட்டது. திருமதி பாஞ்சாலி அம்மாளிடமிருந்து மேற்கொண்டும் வரப் பெற்ற மனுக்களையும் நிராகரித்தது."

டி. என். தங்கதுரை

சென்னை வருகை

சென்னை, ஆக. 20—

அவரா வங்கத் தமிழர் சங்கத் தலைவரும் அண்ணா மணிவிழா மலர்க் குழுத் தலைவருமான திரு. டி. என். தங்கதுரை, இந்திய கலாச்சாரத் தூதுக்குழு உறுப்பினராக அக்குழுவினருடன் டென்மார்க், போலந்து, செக்கோஸ்லோவேகியா, பிரான்சு ஆகிய நாடுகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்துவிட்டு 18—8—68 காலை 9 மணிக்கு விமானமூலம் சென்னை—மீனம்பாக்கம் வந்து சேர்ந்தார்.

விமான நிலையத்தில் அவரை, சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் சா. கணேசன், தமிழ் எழுத்தாளர் சங்கப் பொதுச்செயலாளரும் கௌரவ மாகாண மாஜிஸ்திரேட்டுமான கோ. பன்னீர் செல்வம், லாடனேந்தல் நாராயணன், வங்கத் தமிழர் சங்கச் செயலாளர் மு. இராமையா ஆகியோரும், மற்றும் பலரும் வரவேற்றனர்.

திரு. டி. என். தங்கதுரை அவர்கள் ஒரு வாரம் சென்னையில் தங்கி, அண்ணா மணி விழா மலர் வேலைகளைக் கவனித்துவிட்டு பின், கல்கத்தா செல்லவிருக்கிறார்.

மணி—சாமி குழுவினர்

கலை நிகழ்ச்சிகள்

ஆக. 20: பண்ணுருட்டி; 21: தாளக்குடி; 22: நீடாமங்கலம்; 23: சோழவந்தான்; 24: அலங்காரநல்லூர்; 25: காலை 10 மணி: பரமக்குடி; மாலை: மதுரை; 26: இராசபாளையம்; 27: சங்கரன் கோவில்; 28: கடையம்; 29: வடக்கன்குளம்; 30: நாகர் கோவில்; 31: சந்தோஷபுரம்.

சட்டமன்றத்தில் அண்ணா விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணா:—"முன்னாலேயே சொன்னேன்; முன்பு நடந்ததற்காக நீங்கள் அனுபவிக்க வேண்டுமென்று சொல்லவில்லை; எங்களுக்குப் பின்னாலே வேண்டாம்—முன்னாலேயே எங்களுக்குக் கொடுக்கவேண்டிய அளவுக்குக் கொடுத்தீர்கள். அதற்காகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்ற முறையில் நடந்தது என்று தயவுசெய்து கருதாதீர்கள்.

'போலீசு அதிகாரி அளித்த அறிக்கை முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறதே' என்று சொன்னார்கள். நீங்கள் சொல்லுவதே முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறதே! முதலில் 300 பேர் என்றீர்கள்; பிறகு 500 பேர் என்றீர்கள்; இப்போது அது 600 பேராகக் காரணம் என்ன?

கே. விநாயகம்: "நீதி விசாரணை வையுங்கள்."

அண்ணா:—"நீதி விசாரணை வேண்டியதில்லை; அங்கிருந்து மூர் மார்க்கெட் வரை அடித்துக் கொண்டு போனார்களே என்று கேட்டார்கள்; தடுத்த இடத்தில் -- தடை போட்டவுடனே திரும்பிப் போயிருந்தால் தாக்குதல் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கும்—போலீசுக்கும் இடையே கைகலப்பு நடந்தது; ஆகவே, அந்த இடத்தைவிட்டுப் போகிற வரையில் தாக்குதல் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்தத் தாக்குதலிலே 2 உயர் தரப் போலீசு அதிகாரிகளும் 70 போலீசு அதிகாரிகளும் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதே, 'எதிர்த் தாக்குதல் நடத்தினார்கள்' என்பதற்குச் சான்று!

அதைக்கூட நம்முடைய பொன்னப்ப நாடார், 'பாரோ போலி உடையணிந்த போலீசுக்காரர்கள், நிஜ உடையணிந்த போலீசுக்காரர்களைத் தாக்கினார்கள்' என்றெல்லாம் சொன்னாலும் சொல்லுவார்கள்.

அதைக் கதையாக எழுதி—செய்திக் கதிருக்காக அல்ல—சினிமாப் படமாகப் பிடித்தால், ஒரு சமயம், கற்பனைத் திறத்திற்காக ஒரு இலட்சம் ரூபாய் பரிசை அவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடும் என்று கருதுகிறேன்.

அப்படி அவர்கள் சொல்லும் முறையில் நடக்க இந்த அரசு ஒரு துளியும் இடம் கொடுக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கம்யூனிஸ்டுக் கட்சி நண்பர் சுப்பிரமணியம் அவர்கள் இந்தப் பிரச்சினையைப் பற்றிப் [illegible]கின்றபோது பொதுவான கருத்தைச் சொன்னார்கள் 'ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை வைத்து மட்டுமல்ல -- பொதுவாகவே அதிகாரிகள் மனப்பான்மை மாறவில்லை; அதுவும், போலீசு நடவடிக்கைகள் மாறவில்லை; மாறுதலுக்கு வழி செய்யவேண்டும்' என்று குறிப்பிட்டார்கள்.

அது, பொதுவான கருத்தாகும்; பொதுவான பிரச்சினையாகும்; ஆனால் அவரைப்போல் அடிப்படை மாறுதல் தேவையென்று சொல்லுகின்ற கம்யூனிஸ்டுக் கட்சி அரசாளுகின்ற இடத்திலே தடியடிப் பிரயோகம் நின்றுவிட்டதா --- துப்பாக்கிப் பிரயோகம் நின்றுவிட்டதா --- என்று பார்த்தால் இல்லை; அதற்காக அவர்களும் வருத்தப்பட்டார்கள் என்று கருதுகிறேன். நானும் வருத்தப்படுகிறேன்.

அவரும் நானும் சேர்ந்து எதிர்பார்க்கக்கூடிய நல்ல மாறுதல் வெகு சுலபத்திலே வரமுடியாது --- வெகு எளிதிலே வரமுடியாது --- வெகு விரைவிலே வர முடியாது; கூடுமானவரையில் இந்த ஆட்சியில் அந்த மனப்பான்மை மாறும் வகையில் முயற்சி எடுத்துக்கொண்டுவருகிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பாலசுப்பிரமணியன் (இடது கம்யூனிஸ்டு):—"சென்ற வரவு-செலவுத் தொடர்க் கூட்டத்திலேயே நான் குறிப்பிட்டுச் சொன்னேன்; இந்த அரசில் மட்டுந்தான் என்று நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை; 'கேரளத்திலும் அப்படித்தான் இருக்கிறது' என்று குறிப்பிட்டுச் சொன்னேன். இங்கு ஓர் ஆட்சி -- அங்கு ஓர் ஆட்சி -- என்று இடத்திற்குத் தக்கபடி மாற்றிப் பேசவில்லை; நடக்கின்ற உண்மைகளைத்தான் எடுத்துச்சொன்னேன்; எப்போதும் அப்படியே சொல்லுவேன்."

அண்ணா:— "அதையேதான் நானும் சொன்னேன்; காங்கிரசு நண்பர்கள் சொன்னதற்கும், கம்யூனிஸ்டுக் கட்சி நண்பர்கள் பார்க்கின்ற நோக்கத்திற்கும் வேறுபாடு இருக்கிறது என்பதற்காகத்தான் சொன்னேன்; பொதுக் கருத்தைக் கூறியிருக்கிறீர்கள்.

ஜே. ஜேம்ஸ்:— "ஊர்வலத்திலிருந்து வழி மாறிச் சென்றதற்காக தடியடி செய்யப்பட்டதாகச் சொன்னார்கள்; ஊர்வலத்தின் ஆரம்பப் பகுதியில் இருந்து வழி மாறிச் சென்றார்களா அல்லது பின் பகுதியினர் வழி மாறிச் சென்றார்களா? இதைப் பற்றித் தயவு செய்து விளக்க வேண்டும்."

அண்ணா:—"ஊர்வலம் என்பது முழுப் பகுதியைத்தான் குறிக்[illegible] [illegible]விர, முன் பகுதிக்கு ஒரு [illegible] பின் பகுதிக்கு ஒரு விதி -- [illegible] கிடையாது என்பதை [illegible] உறுப்பினர் அவர்களுக்கு [illegible]ல்லத் தேவையில்லை; [illegible]ரே தெரிந்துகொள்ள [illegible]ன்று."

சேலம் உருக்காலை உண்டா இல்லையா?

தில்லை வில்லாளன் கேள்விக்கு டெல்லியின் மழுப்பல்

'உறுதியாகச் சொல்ல முடியாது' என்கிறார் உருக்குத்துறை அமைச்சர்

புதுடில்லி, ஆக. 19—

"சேலம் உருக்காலை விவகாரம், 'ஒரு நீண்ட -- அலுப்புத் தட்டும் கதை'யாகிவிட்டது; நான்கு அமைச்சர்கள் வந்து போய்விட்டார்கள்; ஒவ்வொருவரும் வாக்குறுதி அளித்துவிட்டு, பிறகு ஏமாற்றம் ஏற்படும்படிச் செய்தார்கள்; இறுதியான முடிவு எப்போது செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்"

என்று நாடாளுமன்ற மேலவையில், கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் கேட்ட கேள்விக்கு உருக்குத் துறைத் துணையமைச்சர் திரு. பி. சி. சேதி பதிலளிக்கையில் கூறியதாவது :—

"நான்காவது திட்டக் காலத்தில் எவ்வளவு உருக்குத் தேவைப்படுமென்பது பற்றி ஓர் ஆராய்ச்சி அறிக்கை தயாரிக்கப்பட்டுவருகிறது; அந்த அறிக்கையைப் பரிசீலனை செய்த பிறகுதான், சேலம் உருக்கு ஆலையை அடுத்த திட்டத்தில் சேர்த்துக்கொள்ளுவது பற்றி முடிவு செய்யப்படும்."

தில்லை வில்லாளன்:—"இதுவரை பதவி வகித்துள்ள நான்கு உருக்கு அமைச்சர்களாலும் உறுதிமொழியளிக்கப்பட்டும் இதுவரை சேலம் உருக்காலைக்கு அனுமதியளிக்கப்படவில்லை; எனவே, மாநில அரசே இத்திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்ற மத்திய அரசு அனுமதிக்குமா?"

அமைச்சர்:—"தமிழக அரசிடமிருந்து, தொழிற்சாலைக்கான உரிமம் கோரி ஒரு விண்ணப்பம் வந்திருக்கிறது; இதில் முக்கியப் பிரச்சினை, நான்காவது திட்டத்தில் எவ்வளவு உருக்கு தேவைப்படும் என்பதுதான்; மேலும், எந்தவிதமான உருக்குத் ஆலைகள்--எந்தெந்த இடங்களில் அமைப்பது என்பன போன்ற மிகவும் நுட்பமான பிரச்சினைகளும் இருக்கின்றன; இவற்றையெல்லாம் ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

"இது ஒரு சிக்கலான பிரச்சினை. இதுபற்றி எப்போது இறுதி முடிவு செய்யப்படும் என்பதை என்னால் திட்டவட்டமாகக் கூற இயலாது.

நடக்க இருப்பவை

21--8--68

சென்னை 42-வது வட்டம்

கலைஞர் கருணாநிதி மன்றத் திறப்பு விழா; மாலை 7-மணிக்கு; தலைவர்: செல்வராசன்; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, துணைமேயர் பவளவண்ணன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, கோவை செழியன் பி.ஏ., சிதம்பரம், வி. தணிகாசலம் எம்.சி., மற்றும் பலர்.

22--8--68

பேராவூரணி

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 5-மணிக்கு வேதாந்தம் அரங்கில் (புகைவண்டி நிலையம் அருகில்); தலைவர்: ஆர். எம். வேணுகோபால்; பேசுவோர்: சேவற்கொடியோன், பி. தமிழ்க் காவலன், ஓவியர் கருணா, லவர் வீரப்பன், ந. சிதம்பரம், சி. நாடிமுத்து, வே. சீனிவாசன், எஸ். கைலைத்தம்பி, எஸ். பி. கண்ணன், எஸ். இராசப்பன், மற்றும் பலர். (இரவு 8-மணிக்கு மணி—சாமி குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

மத்திய அரசுக்கு...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

உத்தரப் பிரதேசம் ரூ. 594 கோடியும், பீகார் ரூ. 519 கோடியும் பாக்கி வைத்திருந்தன.

நிறைய வருமானம் பெறும் மகாராட்டிரம்கூட ரூ. 375 கோடி கடன் பாக்கி வைத்திருக்கிறது.

மற்ற மாநிலங்களின் கடன் பாக்கி வருமாறு :—

ஆந்திரம்	ரூ. 491	கோடி
மேற்கு வங்கம்	ரூ. 471	,,
மத்தியப்பிரதேசம்	ரூ. 375	,,
இராஜஸ்தான்	ரூ. 317	,,
ஒரிசா	ரூ. 322	,,
மைசூர்	ரூ. 258	,,
பஞ்சாப்	ரூ. 208	,,
குசராத்	ரூ. 208	,,
அசாம்	ரூ. 203	,,
கேரளம்	ரூ. 192	,,
அரியானா	ரூ. 155	,,
ஜம்மு-காஷ்மீர்	ரூ. 130	,,
நாகாலாந்து	ரூ. 8	,,

அமைச்சர் முத்துசாமி

நாளை சென்னை திரும்புகிறார்

சென்னை, ஆக. 20—

சோவியத் நாட்டுக்குச் சென்றிருந்த தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி, தமது சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு புதுடில்லிக்கு வந்து சேர்ந்துவிட்டார்; நாளை சென்னை வந்து சேருகிறார்.

நாளை (புதன்கிழமை) பிற்பகல் 1 மணிக்கு அமைச்சர் முத்துசாமியும், மாநகராட்சி தி. மு. க. கட்சித் தலைவர் வி. முனுசாமியும் விமான மூலம் மீனம்பாக்கம் வந்து சேருவர்.

அமைச்சருடன் சென்றிருந்த மற்றவர்களான மேயர் அப்துல்லா சேட், ஆணையர் அம்பாசங்கர், சிலார் மியான், உமாபதி ஆகியோர் இன்று சென்னை வந்து சேர்ந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அறிஞர் அச்சகத்தில் (24, [illegible] செட்டித் தெரு, சென்னை-16) அச்சிட்டு வெளியிடப்பெற்றது